# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,243 — 1936 ம் ஞூ புரட்டாசிமீ 11 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரம்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 1,404 (கண்டி).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1936 ம் ஞூ செப்ரெம்பர் (புரட்டாதி)மீ 11 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெலிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன விஷயத்திற் செய்யவேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனுல அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1936 ம் ஞூ (ஜுலை) ஆடிமீ 29 ந் தேதியிலன்று கண்டிக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஆர். மொனிபெனி,
உதவி அரசாட்சி ஏசன்ற், கணடி.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்திய மாகாண அரசாட்சி ஏஜண்டரிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக், உடபலாத்த பகுதியில் கண்டு காற பகல கோறளையில் பன்விலதென்ன கிராமத்திலிருக்கும் பின்வரும் காணித்துண்டுகள்:—

I.—பிரதமபட இல. 8,801.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 7 | மொறகொல்லபத்தன | 2 | 3 | 34 |
| 9 | ஷை | 0 | 2 | 27 |
| | | 3 | 2 | 21 |

எல்லை : வடக்கு-முடியால் தீர்த்துக்கொடுக்கப்பட்ட மொறகொல்லபத்தன (பி. ப. A 251 ல் 6 ம் காணித்துண்டு), உரிமைபடம் 68,613 ல் விபரித்த. காணி ; கிழக்கு-உரிமைபடங்கள் T 5,603 லும், 53,505 லும் விபரித்த காணிகள் ; தெற்கு-உரிமைபடங்கள் T 5,604 லும், T 4,500 லும், வியரித்த காணிகள் ; மேற்கு-உரிமைபடம் 68,606 ல் விபரித்த காணி.

II.—பிரத்மபட இல. A 251.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | மொறகொலலபத்தன (பகிரங்க பகுதி தெருவோடு சேமித்த நிலம்) | 0 | 1 | 4 |
| 2 | ஷை | 0 | 1 | 12 |
| 5 | ஷை | 0 | 0 | 23 |
| 8 | ஷை | 0 | 1 | 5 |
| 10 | ஷை | 0 | 0 | 25 |
| | | 1 | 0 | 29 |

எல்லை.: மேற்கும் வடக்கும்-ஒரு தெரு ; கிழக்கு-ஒரு தெருவும் உரிமைபடம் 68,613 ல் விபராித்த காணியும் ; தெற்கும்-உரிமைபடங்கள் T 4,589 லும், 68,606 லும், விபரித்த காணிகளும், முடியால் தீர்த்துக்கொடுக்கப்பட்ட மொறகொலல பத்தனவும் (பி. ப. A 251 ல் 7 ம், 9 ம், காணித் துண்டுகள்).

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரம்.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கிராமச்சங்க பிரேதச் சேம இடத்துக்கு றேட்டு அமைத்தல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 454. குறிச்சி—குமாரகட்டுவா-மூனிஸ்வரம்பற்று.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பலியேவத்தை | தென்னந்தொட்டம் | வண. ரீ. டொன் யோசேப், சுவாமியார், ருசகடலுவா | 0 | 0 | 13·3 |

எடுத்தீக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை. 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1936 ம் ஹூ ஐப்பசி மாசம் 14 ந் தேதியிலன்று காலே 10 மணிக்கு ருஜகடுவ கிராமக் கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடதிற கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

புத்தளம் கச்சேரி,
1936 ம் ஹூ புரட்டாதிமீ 3 ந் உ.

ஏ. ஈ. கிறிஸ்தோபல்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

கீழே குறிக்கப்பட்ட வேலைகளை முடித்துக்கொள்வதற்கு முத்திரை வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை 1936 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி பிற்பகல் 2 மணி வரைக்கும் புத்தளம் கச்சேரியில் புத்தளம் சலாபம் பகுதிச் சுகாதார சங்கத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கற்பிட்டி சுகாதார சங்க எல்லைக்குள்—

(a) ஒவ்வொரு நாளும் எல்லாத் தெருக்களையும், கான்களையும் கூட்டுதலும், கூட்டப்பட்ட கூளங்களைத் தூரத்தில் திருப்திகரமாக அப்புறப்படுத்திவிடுதலும், அக்கூளத்துக்குக் கொந்திராத்துக்காரர் உரிமையுடையவராக இருப்பார்.

(b) ஒவ்வொரு நாளும் பட்டணத்துக் கக்கூசையும் சில சொந்தக் கக்கூசுகளையும் துப்பரவாக வைத்துக்கொள்வதுடன் மலசலாதிகளை எடுத்துத் திருப்திகரமாக அப்புறப்படுத்திவிடுதலும், அம்மலசலாதிகளுக்கு கொந்திராத்துக்காரர் உரியுடையவராக விருப்பார். கொந்திராத்துக்காரர் இவ்வேலைகளுக்காக ஒவ்வொரு நாளும் 3 ஆண் வேலையாட்களும், 3 பெண் வேலையாட்களும், 3 மாடும், இரட்டை மாட்டுக் கரத்தையொன்றும், மலசலங்கள் கொண்டு போவதற்கு ஒரு வேலைஆளும், ஒரு கரத்தைக்காரனும் கொடுத்தல் வேண்டும்.

(2) ஒரு வருஷத்திற்கு இவ்வளவென்று குறிப்புடன் 1, 2 அல்லது 3 வருஷங்களுக்கு மேல்வரும் கொந்திராத்துத் தொகையையும் விருப்பமானுல் குறித்து அனுப்பலாம்.

(3) சுகாதார சங்க எல்லைக்குள்ளேனும், அல்லது எல்லைக்குள்ளிருந்து அரைமைலுக்கப்பாலேனும் கூட்டப்பட்ட கூளங்களைக் கொண்டுபோய் போடுவதனுல், இரண்டடி தாழ்வில் குழிகள் வெட்டி அக்கூளங்களால் ஒரு கெடுதியும் உண்டாக்காத வண்ணம் அவைகளை அக்குழிகளில்போட்டு உடனே மண்ணினுல் மூடிவிடல் வேண்டும்.

(4) வேறு விபரங்களும், கேள்விப்பத்திரம் அனுப்பும் மாதிரியும் கச்சேரியில் அல்லது கற்பிட்டி செனிடரி இன்ஸ்பெக்டர் கந்தோரில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். புத்தளம் கச்சேரியில் அல்லது கற்பிட்டி செனிடரி இன்ஸ்பெக்டரால் கொடுக்கப்படும் விண்ணப்பப்பத்திரக்கடுதாசியில் தங்கள் கேள்விகளை நிரப்பியனுப்பவேண்டும்.

(5) ஒவ்வொரு கேள்விக்காரரும் இவ்வேலைக்காகக் கேள்விப்பத்திரம் அனுப்புவதற்குமுன் கச்சேரியில் ஐந்து ரூபாய் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுத் தன்து கேள்விப்பத்திரத்துடன் அணைத்து அனுப்பவேண்டும். அப்படியல்லாத பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஏற்றுக் கொள்ளப்படாத கேள்விக்காரர்கள் அனுப்பிய பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

(6) அனுகூலமான கேள்விக்காரரோ அல்லது கேள்விக்காரர்களோ கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கிழமைக்குள் கேட்கப்பட்ட தொகையில் பத்தில் ஒரு பங்குப் பணத்தை பிணையாகக் கட்டி பொருத்தத்தை நிறைவேற்றும் பொருட்டு ஒரு சாதனம் எழுதிக்கொடுத்தல் வேண்டும். இதைச் செய்யத் தவறினுல் ஐந்தாம் பிரிவிற் சொல்லிய கேள்விக்காரரால் கட்டப்பட்ட பணத்தொகையை பறிமுதற்செய்ய சுகாதார சங்கத் தலைவருக்கு உரிமையாயிருக்கும். இந்தக் கேள்விப்பத்திரத்தில் முழுத் தொகையையாவது ஒரு பாகத்தையாவது அங்கீகரிப்பதற்கு அல்லது தள்ளுகிறதற்கு சுகாதார சங்கத்தலைவருக்கு உரிமையாயிருக்கும்.

ஆர். சிந்தாமணி,
சுகாதாரசங்கத் தலைவருக்காக,
(புத்தளம் சலாபம்).

புத்தளம் கச்சேரி,
1936 ம் ஆண்டு புரட்டாதிமீ 2 ந் உ.

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.